ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் பாராளுமன்றத் தேர்தலை இடைநிறுத்தக்கோரி கொடுக்கப்பட்ட மனு தொடர்பாக மவ்பிம, லங்காதீப மற்றும் தினமின பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் எம்மால் ஆய்வு செய்யப்பட்டன.

"ஐ.தே.க முன்வைத்த மனுவை அக்கட்சியே மீளப்பெற்றுக்கொண்டது" என்ற தலைப்பில் லங்காதீப செய்தியறிக்கையும், "அகில அடிப்படை உரிமை மனுவை திரும்பப்பெற்றார்" என்ற தலைப்பில் தினமின செய்தியறிக்கையும் பிரசுரிக்கப்பட்டன. மனுதாரர் தாமே மனுவை மீளப்பெறுவதாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை உயர் நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி (dismiss) செய்ததாக தினமின மற்றும் லங்காதீப செய்திகள் தெரிவித்தன. ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் மற்றும் சட்டமா அதிபர் சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆகியோர் மூலம் முன்வைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மனுதாரர்கள் அந்த மனுவை மீளப்பெற்றுக்கொள்ள அனுமதி கோரியதாக தினமின செய்தி மேலும் தெரிவித்தது.

எனினும் "பொதுத் தேர்தலுக்கு எதிரான அகிலவின் மனு தள்ளுபடி (Dismissed)" என்ற தலைப்பிற்கமைய பிரசுரிக்கப்பட்ட மவ்பிம செய்தியறிக்கையில், இந்த மனு உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று (ஜூன் 9) தள்ளுபடி செய்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அது தள்ளுபடி செய்யப்பட்டது , ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் மற்றும் சட்டமா அதிபர் சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆகியோர் மூலம் முன்வைக்கப்பட்ட ஆரம்ப கட்ட ஆட்சேபனைக்கு அமைவாக என அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நோக்கும்போது, இந்த மனு தொடர்பாக தினமின மற்றும் லங்காதீப பத்திரிகைகள் முன்வைக்கும் விடயங்களுக்கு மாறான விடயங்கள் மவ்பிம பத்திரிகையினால் முன்வைக்கப்படுகின்றது. இங்கு யார் சரியான செய்தியை முன்வைக்கிறார்கள் என்பதே வாசகர்களாகிய நாம் கேட்கக்கூடிய கேள்வியாகும். மேலும், வாசகர்களை தவறான வழியில் நடத்தும் வகையில் ஒரு சிறிய தகவலை ஒரு பத்திரிக்கை வெளியிட்டிருந்தாலும் அது ஊடக நெறிமுறைகளை மீறுவதான செயல் என இங்கு குறிப்பிடத்தக்கது.

**#Mawbima #Lankadeepa #Dinamina #SinhalaPress #MediaEthicsSL**